

திருவள்ளூர் நகராட்சிக்குட்பட்ட 15வது வார்டு புங்கத்தூர் பகுதியில் அதிமுக ஆட்சியில் கிடப்பில் இருந்த வீட்டுமனை பட்டாக்களை ஆவடியில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 16 குடும்பங்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்கியதற்கு 15 வார்டு கவுன்சிலர் டி.செல்வாகுமார் தலைமையில் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.இராஜேந்திரன் நேரில் சந்தித்தபோது தமிழ்நாடு முதல்வருக்கும் துணை முதல்வருக்கு அப்பகுதி மக்கள் நன்றி தெரிவித்தார்கள் அருகில் நகர மன்ற தலைவர் உதயமலர்பாண்டியன், கே.திராவிடபக்தன், எஸ்.மகாலிங்கம், டி.மோதிலால், பிரகாஷ்ஞானஒலி, பி.கே.நாகராஜ், தி.ஆ.கமலக்கண்ணன், கொப்பூர் திலீப், சரவணன், ஆதிகேசவன், மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.

### கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. தலைமையில்

# சென்னை தெற்கு மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!



சென்னை தெற்கு மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டம் நாளை (16.12.2025 - செவ்வாய்க்கிழமை) காலை 10 மணி அளவில், சைதை பஜார் சாலையில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி., தலைமையில் நடைபெற உள்ளது.

எனவே இந்த ஆலோசனைக் கூட்டத்தில் சென்னைத் தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், தொகுதிப் பார்வையாளர்கள், பகுதிக் கழகச் செயலாளர்கள் மற்றும் ஒன்றியக் கழகச் செயலாளர்கள் ஆகியோர் பங்கேற்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:- கழக ஆக்கப் பணிகள்.

**அமைச்சர் மா.சுப்பிரமணியன்**
செயலாளர், சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளையொட்டி

# “அன்னம் தரும் அமுதகரம்” 298 வது நாள்!

## எழும்பூர் தெற்கு பகுதியில் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!



*சென்னை, டிச.15-*

*முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 298 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (14.12.2025), எழும்பூர் தெற்கு பகுதி: 1) வட்டம் 108, அப்பா ராவ் கார்டன், 2) வட்டம் 108அ, அம்பேத்கர் திடல், சேத்துப்பட்டு, சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும்-இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.*

*இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மேயர் பிரியா ராஜன், வி.சுதாகர், சொ. வேலு, கோ.ஏகப்பன், கே.எஸ்.ரவிச்சந்திரன், தமிழன்பிரசன்னா, புனிதவதி எத்திராசன், கே.எஸ்.எம்.நாதன், கோ. மணி, ஜி.தாமோதரன், பி.எம். யாழினி, ராஜேஸ்வரிஸ்ரீதர், பரிதிஇளம்சுருதி, எழும்பூர் தெற்கு/வடக்கு வட்ட கழக செயலாளர்கள்: வி.விஜய குமார், ஆர்.பாபு, டால்பின் எஸ்.அரிகிருஷ்ணன், இ. மொய்தீன், வான்மதி கதிரவன், எல்.சுந்தர்ராஜன், தி. தயாளன், வி.அபாய், சு.மனோகர், ந.பாலு, ஆர்.எம்.ரங்கநாதன், சி.சேகர், ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ். முரளி, பெரம்பூர் ஆர்.ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம. அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப் குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.*

### தமிழ்நாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் – மக்கள் அமைதியாகவும்,சுதந்திரமாகவும்

# வழிபாட்டு முறைகளை பின்பற்ற பல்வேறு திட்டங்களை வகுத்துள்ளார்!

## மக்களவையில் மரு.ராணி ஸ்ரீ குமார் பேச்சு!



புதுடெல்லி, டிச.15–

நாடாளுமன்ற மக்களவையில் மருத்துவர் ராணி ஸ்ரீ குமார் பேசியதாவது:–

எங்களுடைய திராவிட மாடல் முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற நான்கரை ஆண்டு காலத்தில் இந்த சமய அறநிலைத் துறைக்கு பல்வேறு திட்டங்களை வகுத்துள்ளார்கள். இன்று வரை 3,935 க்கும் மேற்பட்ட திருக்கோயில்களில் குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது.

திருக்கோவிலுக்கு சொந்தமான 8024 ஏக்கர் நிலங்கள் ஆக்கிரமிப்பில் இருந்து மீட்கப்பட்டுள்ளன. பழமையான 352 திருக்கோயில் களின் மேம்பாட்டு பணிக்காக சுமார் 560 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தொன்மையான 76 திருக்கோயில்களில் குடமுழுக்கு நிறைவு பெற்றுள்ளது.

இந்த ஆட்சியின் குறிப்பிடத்தக்க சாதனையாக 150 ஆண்டுகளாக நடத்தப்படாமல் இருந்த தேர் திருவிழாக்கள் நடத்தப்பட்டுள்ளன. திருக்கோயில் அன்னதான திட்டத்திற்காக ஆண்டு தோறும் கிட்டதட்ட 120 கோடி ஒதுக்கப்பட்டு சுமார் 3 கோடி 65 லட்சம் பக்தர்கள் இத்திட்டத்தால் பயன்படுத்தப் பட்டுள்ளன.

பேரவை தலைவர் அவர்களே எங்களுடைய தமிழ்நாட்டில் மக்கள் அமைதியாகவும் சுதந்திரமாகவும் தங்கள் வழிபாட்டு முறைகளை பின்பற்றுவதற்காக முதலமைச்சர் அவர்கள் பல்வேறு திட்டங்களை வகுத்துள்ளார்கள். அதன்படி தான் இன்றைக்கும் நடந்து கொண்டிருக்கிறது.

மேலும் தமிழ் கடவுள் ஆன முருகனுக்கு எவ்வாறு எல்லாம் வழிபாடு செய்ய வேண்டும் என்ற வழிபாட்டு முறைகளை தமிழ்நாட்டு மக்களாகிய எங்களுக்கு யாரும் கற்றுத் தர வேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன். தமிழ்நாட்டில் அனைத்தும் தரப்பு மக்களும் ஒற்றுமையுடன், இணக்கமாக இருந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்த அமைதி யான சூழ்நிலையில் சில மதவாத சக்திகள் மதத்தின் பெயரால் பொய்யான தகவல்களை பரப்பி மக்களை பிரித்து அமைதி பூங்காவாக விளங்கிக் கொண்டிருக்கிற எங்கள் தமிழ்நாட்டில் கலவர பூமியாக மாற்ற முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள். அதை தமிழ்நாட்டு மக்கள் என்றைக்கும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

மதத்தின் பெயரால் மக்களை பிரிக்கும் மதவாத சக்திகளை என்றைக்கும் தமிழ்நாட்டில் நாங்கள் நுழைய விட மாட்டோம். தமிழ்நாட்டில் மதசார்பற்ற கட்டமைப்பை எங்கள் முதலமைச்சர் அவர்கள் சிறப்பாக செல்படுத்தி வருகிறார்கள். இதையெல்லாம் மற்ற மாநிலங்கள் பின்பற்றுமா?

பேரவை தலைவர் அவர்களே திருப்பரங்குன்றத்தில் முருகர் சிரித்தால் திருத்தணியில் மட்டுமல்ல, இந்த டெல்லியிலும் எதிரொலிக்கும், என்பதை நாங்கள் ஆணித்தனமாக கூறிக் கொள்கிறோம். மதவாத சக்திகளுக்கு எதிராக தமிழ்நாடு போராடும். தமிழ்நாடு வெல்லும் நன்றி.

இவ்வாறு தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார் மக்களவையில் பேசியுள்ளார்.

### 113 ‘ஆ’ வட்ட மாவட்டப் பிரதிநிதி

# சி.பாஷாபாபு தாயார் ச.அங்கம்மாள் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!



*சென்னை, டிச.15-*

*சென்னை மேற்கு மாவட்டம் ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி 113 “ஆ” வது வட்டம் தொழிலாளர் முன்னேற்ற சங்க பேரவை செயற்குழு உறுப்பினர் மற்றும் தொழிலாளர் முன்னேற்ற சங்க பேரவை மாவட்ட அமைப்பாளர் சி.பாஷா பாபு தாயாரும் மறைந்த தந்தை சக்கரபாணி அவர்களின் துணைவியாருமான ச.அங்கம்மாள் அம்மையார் (76) வயது அவர்கள் உடல்நலமின்றி நேற்று (14.12.2025) மாலை 5 மணி அளவில் சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.*

*அம்மையாரின் உடல் இன்று மாலை 5 மணி அளவில் லாலா தோட்டம் மாம்பலம் நெடுஞ் சாலை, தியாகராய நகர், சென்னை -17 இல்ல முகவரியில் இருந்து அமைதி ஊர்வலமாக கொண்டு செல்லப்பட்டு நுங்கம்பாக்கம் இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்படுகிறது.*

*தகவல் அறிந்ததும் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் அஞ்சலி செலுத்தினர்.*

### ஆயுர்வேதம், சித்தா

# மருந்து உற்பத்தியாளர்களின் சிக்கல்கள் தீர்க்கப்படுமா?

## மக்களவையில் – தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி!



புதுடெல்லி, டிச. 15–

தென்சென்னை தொகுதி தி.மு.க. எம்.பி. தமிழச்சி தங்கபாண்டியன், ஆயுர்வேதம், சித்தம், யுனானி உள்ளிட்ட பாரம்பரிய மருத்துவ மருந்துகளின் தரம், ஆய்வக வசதி மற்றும் சிறு உற்பத்தியாளர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள் தொடர்பாக நாடாளுமன்ற மக்களவையில் முக்கியமான கேள்விகளை எழுப்பினார்.

தமிழ்நாட்டில் ஆயுர்வேத, சித்த, யுனானி மருந்து உற்பத்தியாளர்கள் மற்றும் பயிற்சியாளர்கள் எதிர்கொள்ளும் ஒழுங்குமுறை இணக்கச் சிக்கல்கள் குறித்து ஒன்றிய அரசு சமீபத்தில் ஏதேனும் மதிப்பாய்வு மேற்கொண்டுள்ளதா என்றும், மாநில மருந்து பரிசோதனை ஆய்வகங்கள் மற்றும் அரசு ஆய்வாளர்களின் திறன் குறித்து ஆய்வு செய்யப்பட்டுள்ளதா என்றும் அவர் கேள்வி எழுப்பினார். மேலும், மருந்து சோதனையை வலுப்படுத்துதல், நிலுவையில் உள்ள பரிசோதனைகளை குறைத்தல், ஆய்வக உட்கட்டமைப்பை மேம்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன என்றும், லேபிளிங், பேக்கேஜிங் மற்றும் ஆவணப்படுத்தலில் சிரமம் எதிர்கொள்ளும் சிறிய உற்பத்தியாளர்கள் மற்றும் பயிற்சியாளர்களுக்காக எளிமைப் படுத்தப்பட்ட வழிகாட்டுதல் அல்லது படிப்படியான இணக்க ஆதரவை வழங்க அரசு முன்வந்துள்ளதா என்றும் அவர் விளக்கம் கேட்டார். இதனுடன், இந்த விவகாரம் தொடர்பாக தமிழ்நாட்டின் மாநில உரிமம் வழங்கும் அதிகாரிகளுடன் மேற்கொள்ளப்பட்ட ஆலோசனைகளின் விவரங்களையும் அவர் கோரினார்.

இதற்கு பதிலளித்து ஒன்றிய ஆயுஷ் துறை அமைச்சர் பிரதாப் ராவ் ஜாதவ் எழுத்துப்பூர்வமாக பதிலளித்தார். அது வருமாறு:–

மருந்துகள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் சட்டம், 1940 மற்றும் மருந்துகள் விதிகள், 1945 ஆகியவற்றின் கீழ், ஆயுர்வேதம், சித்தா, சவுரிக்பா, யுனானி மற்றும் ஓமியோபதி மருந்துகளின் தரக் கட்டுப்பாடு மற்றும் உரிமம் வழங்குதல் தொடர்பான சட்ட விதிகளை அமல்படுத்துவது, ஒன்றிய–மாநில அரசுகள் நியமித்துள்ள மாநில மருந்து கட்டுப்பாட்டாளர்கள் மற்றும் மாநில உரிமம் வழங்கும் அதிகாரிகளின் பொறுப்பாக இருப்ப தாக தெரிவித்தார்.

தமிழ்நாடு அரசிடமிருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில், மாநில மருந்து ஆய்வாளர்கள் (இந்திய மருத்துவம்) மூலப்பொருட்களின் பாதுகாப்பு மற்றும் தரம், பரிந்துரைக்கப்பட்ட ஒழுங்குமுறை தரங்களுடன் இறுதி தயாரிப்புகளின் இணக்கம், நல்ல உற்பத்தி நடைமுறைகள் (GMP) ஆகியவற்றை உறுதி செய்ய உற்பத்தி வளாகங்களில் தொடர்ச்சியான ஆய்வுகளை மேற்கொண்டு வருவதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

மேலும், தமிழ்நாட்டில் ஆயுர்வேதம், சித்த மருத்துவம், யுனானி மற்றும் ஓமியோபதி மருந்துகளின் பரிசோதனையை எளிதாக்கு வதற்காக ஒரு மாநில மருந்து பரிசோதனை ஆய்வகம் (இந்திய மருத்துவம்) மற்றும் ஒரு அரசு ஆய்வாளர் தற்போது செயல்பட்டு வருவதாகவும், ஒன்றிய அரசின் திட்டமான ‘ஆயுஷ் குன்வத்த ஏவம் உத்பதன் சம்வர்தன் யோஜனா’ திட்டத்தின் கீழ் அந்த ஆய்வகத்தை வலுப்படுத்த ரூ.1.12 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மூலப்பொருட்கள் மற்றும் மருந்துகளை பரிசோதிப்பதற்காக, மருந்துகள் விதிகள், 1945ன் விதி 160 (E)ன் கீழ் தமிழ்நாட்டில் 14 தனியார் மருந்து பரிசோதனை ஆய்வகங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாகவும், மாநில மருந்து பரிசோதனை ஆய்வகத்தால் பரிசோதிக்கப்பட்ட மாதிரிகளின் விவரங்கள் இணைப்பாக வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

ஆயுர்வேதம், சித்தா, சவுரிக்பா மற்றும் யுனானி மருந்துகளுக்கான லேபிளிங் மற்றும் பேக்கேஜிங் விதிகள் மருந்துகள் விதிகள், 1945 ன் விதி 161ன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், ஏற்றுமதிக்கான மருந்துகளுக்கு விதி 161 (A)ன் கீழ் விலக்குகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் விளக்கினார். இதேபோல், நல்ல உற்பத்தி நடைமுறைகள் தொடர்பான விதிகள் மருந்துகள் விதிகளின் அட்டவணை ‘T’யில் குறிப்பிடப்பட்டுள்ளன என்றும் தெரிவித்தார்.

இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதிக்கான மருந்தியல் ஆணையம் (PCIM&H), ஆயுஷ் அமைச்சகத்தின் கீழ் துணை அலுவலகமாக செயல்பட்டு வருவதாகவும், மருந்து ஒழுங்குமுறை அதிகாரிகள், தரக் கட்டுப்பாட்டு பணியாளர்கள் மற்றும் மருந்து உற்பத்தியாளர்களுக்காக காலாண்டு அடிப்படையில் திறன் மேம்பாட்டு பயிற்சிகளை நடத்தி வருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். கடந்த மூன்று நிதியாண்டு களில் மொத்தம் 11 திறன் மேம்பாட்டு பயிற்சி (CBT) திட்டங்கள் நடத்தப்பட்டு, இதில் சித்த மருத்துவத்தைச் சேர்ந்த 7 பேர் உட்பட 207 பேர் பங்கேற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ASSU மருந்துகள் தொடர்பான பல்வேறு விவகாரங்களில், ஆயுஷ் அமைச்சகம் தமிழ்நாடு அரசு உள்ளிட்ட மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகளுடன் தொடர்ந்து ஆலோசனை நடத்தி வருவதாகவும், மருந்துகள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் சட்டம், 1940ன் பிரிவு 33 (D)ன் கீழ் அமைக்கப்பட்டுள்ள ஆயுர்வேத, சித்த மற்றும் யுனானி மருந்துகள் ஆலோசனைக் குழுவில் தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களின் பிரதிநிதிகள் இடம்பெற்றுள்ளதாகவும் அமைச்சர் விளக்கினார். இந்த குழு, நாடு முழுவதும் சட்டத்தின் சீரான அமலாக்கத்தை உறுதி செய்ய மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு ஆலோசனை வழங்கி வருவதாகவும் அவர் கூறினார்.

மக்களவையில் எழுந்த இந்த கேள்விகள், பாரம்பரிய மருத்துவ மருந்துத் துறையில் தரம், ஒழுங்குமுறை எளிமை மற்றும் சிறு உற்பத்தியாளர்களின் சிக்கல்கள் குறித்து தேசிய அளவில் மீண்டும் கவனம் ஈர்த்துள்ளதாக குறிப்பிடத் தக்கது.



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், தாம்பரம் மாநகரம், பம்மல் வடக்குப் பகுதி செயல்வீரர்கள் கூட்டம் நடைபெற்றது. நிகழ்ச்சியில் தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ.காமராஜ், மண்டல குழு தலைவர் வே. கருணாநிதி, பம்மல் வடக்கு பகுதி செயலாளர் த. ஜெயக்குமார், தாம்பரம் மாநகர துணை செயலாளர் இரா.நரேஷ் கண்ணா, பகுதி கழகத்தின் நிர்வாகிகள் கே. சந்திரன், மு.ஸ்ரீதர், க.ஜெயசீலன், ஜி.பபிதா, ச.பிரபு, சி. பார்த்தசாரதி, க.சுந்தரமூர்த்தி, இரா.குமரேசன், இரா.பாபுஜி, வட்ட கழக செயலாளர்கள் க. மோகன், ப. அன்பழகன், ப.ஆண்டவன், மு.நி.தமிழ் குமரன், டி.எம். ஜோசப், இ.பாலாஜி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.






சென்னை வடக்கு மாவட்ட
இலக்கிய அணி சார்பில்
நாள் : 15.12.2025 திங்கட்கிழமை மாலை 6.00 மணிக்கு
இடம் : அப்பாசாமி மெயின் தெரு, மேட்டு கடை
கழக இளைஞரணி செயலாளர், நம் இளந்தலைவர்,
மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர்
உதயநிதி ஸ்டாலின்
அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு
பொதுக்கூட்டம் மற்றும்
நலதிட்ட உதவிகள் வழங்கும் விழா
தலைமை:
ஒலி.ஒளி. ஆ.பாபு மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர்
வரவேற்புரை:
இலக்கிய அணி மாவட்ட நிர்வாகிகள் :
பா.ஆ.சண்முகம் கோ.இராதாகிருஷ்ணன் A.K.பால்சாமி P.ரவிசங்கர் க.சிவகுமார் கோ.ரத்தினவேல் M.லோகநாதன் க.ஜெயராஜ்
இலக்கிய அணி பகுதி அமைப்பாளர்கள்: மு.ஜெகன் ஓ.இ.அழகானந்தம் எம்.மோகன்பாபு என்.வேதா எஸ்.எம்.கஜேந்திரன் பி.கல்யாணசுந்தரம்
முன்னிலை:
ஜே.ஜே.எபினேசர் M.Com.,BL., MLA
சென்னை வடக்கு மாவட்ட இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர்
இரா.லட்சுமணன்
ஆர்.கே.நகர்.பகுதி செயலாளர் [கிழக்கு]
என்.அனிபா R.D.ராஜா K.பாலு M.வேதலட்சுமி K.B.சதீஷ்குமார்
சிறப்புரை: ப.தாயகம்கவி MLA
கழக துணை அமைப்பு செயலாளர்
நலதிட்ட உதவிகள் வழங்குபவர்கள்:
ஆர்.டி.சேகர் B.Com.,BL., MLA
மாவட்ட பொறுப்பாளர்
Dr. கலாநிதி வீராசாமி M.P
மாநில அயலக அணி தலைவர்
வி.பி.கலைராஜன் BA., BL.,
மாநில இலக்கிய அணி செயலாளர்
எஸ்.ஜெபதாஸ்பாண்டியன் ஆர்.கே.நகர்.மேற்கு பகுதி செயலாளர்
கே.வி.லோகேஷ் ஆர்.கே.நகர் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர்
வழக்கறிஞர் என்.மருதுகணேஷ் B.Com.,BL., கழக சட்டத்துறை துணை செயலாளர்
செ.ஜோதி இளம் பேச்சாளர்
R.வெற்றிவீரன் S.R.கமலகண்ணன் க.நாகம்மை நேதாஜி யு.கணேசன் வே.சிவகுமார்
இர.பொன்இளவரசன் வெ.சு.சத்தியநாரயணன் V.V.ரமேஷ் A.T.மணி S.M.பரசுராமன் E.ரவிக்குமார் கட்பீஸ் ப.சோமசுந்தரமூர்த்தி
ச.தமிழ்செல்வன் N.M.கதிரேசன் தா.வ.மு.கஜேந்திரன் நா.கோதண்டன் மா.நாகராஜன் பொ.து.ராஜா J.பிரேம்ஆனந்த்
நன்றியுரை : ப.குமார் 42வது வட்ட செயலாளர் ஆ.மணி 42வது வட்ட பொருளாளர்
சென்னை வடக்கு மாவட்ட இலக்கிய அணி